நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

04-03-2025

# திமுக கூட்டணியில் எங்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை

## தொல். திருமாவளவன்

**மதுரை/திருப்பரங்குன்றம், மார்ச் 3:** திமுக கூட்டணியில் எங்களுக்கு எந்த நெருக்கடியும் இல்லை என விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகள் நியமனத்தில் அனைத்து சமூகத்தினரும் இடம் பெறும் வகையில் பிரதிநிதித்துவம் தர வேண்டும் என்பதை வலியுறுத்தி, வழக்குரைஞர்கள் சங்கம் சார்பில் மதுரை மாவட்ட நீதிமன்றம் முன் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் பங்கேற்றார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

உயர்நீதிமன்றங்களில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன. இந்தப் பணியிடங்களில் ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் நீதிபதிகளாக நியமிக்க வேண்டும்.



மதுரை மாவட்ட நீதிமன்றம் முன் திங்கள்கிழமை நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன்.

தென் மாவட்டங்களில் உள்ள பிறமலைக் கள்ளர், அருந்ததியர், மறவர், ஆதிதிராவிடர் சமுதாயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் நீதிமன்ற நியமனங்களில் இல்லை என்ற குறை உள்ளது.

இதுதொடர்பாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, உரிய நீதிபதிகளின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மத்திய, மாநில அமைச்சர்களிடம் முறையிட்டுள்ளனர். சமூக நீதியைப் பின்பற்றுவதற்கு உரிய வழிகாட்டுதல்களை அரசும், சட்டத் துறையும் வழங்க வேண்டும்.

திமுக கூட்டணியில் கருத்து முரண்கள் இருந்தாலும், ஒற்றுமையோடு இருக்கிறோம். கூட்டணியில் இருந்து கொண்டே வெளிப்படையாகத்தான் அனைத்து பிரச்னைகளுக்கும் போராடி வருகிறோம்.

திமுக கூட்டணியில் எங்களுக்கு எந்த ஒரு நெருக்கடியும் இல்லை. கூட்டணியில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும் ஓர் அங்கம். திமுக கூட்டணியை உருவாக்கியதில் எங்களுக்கும் பங்கு உள்ளது. இதைக் காப்பாற்றுவதற்கான பொறுப்பும் எங்களுக்கு உள்ளது என்றார் அவர்.

**தொகுதி மறுவரையறை விவகாரம்:** மதுரை வில்லாபுரத்தில் மாலையில் நடைபெற்ற ரமலான் நோன்பு திறப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற திருமாவளவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

மக்களவைத் தொகுதிகள் மறுவரையறையால் தமிழகத்தில் தற்போது உள்ள 39 மக்களவைத் தொகுதிகள் 31 தொகுதிகளாக குறைய வாய்ப்பு உள்ளது என வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, மாநிலங்களின் தற்போதைய மக்களவை உறுப்பினர்கள் எண்ணிக்கையிலிருந்து 20 சதவீதம் உயர்த்திக் கொள்ளலாம் என்ற வழிகாட்டுதலை விசிக முன்மொழிகிறது.

புதன்கிழமை (மார்ச் 5) நடைபெறும் அனைத்துக் கட்சிகள் கூட்டத்திலும் நாங்கள் இதை வலியுறுத்த உள்ளோம்.

வருகிற 9-ஆம் தேதி மதுரையில் அனைத்து ஜனநாயக சக்திகள், அரசியல் கட்சிகள், கட்சி சார்பற்றவர்கள் மத நல்லிணக்கப் பேரணி நடத்தத் திட்டமிடப்பட்டது. இதற்கு மாநகரக் காவல் ஆணையர் அனுமதி மறுத்துள்ளது அதிர்ச்சியளிக்கிறது என்றார் அவர்.